Source: *Tamil Murasu*, p2
Date: 13 April 2019

# உறுப்பு மாற்று சிகிச்சையை மேம்படுத்த புதிய நிலையம்

சிங்கப்பூரில் உடல் உறுப்பு மாற்று சிகிச்சை நிபுணர்களை ஒரே இடத்தில் ஒருங்கிணைக்கும் வகையில் புதிய உறுப்பு மாற்று நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் பொது மருத்துவ மனையில் அமைந்துள்ள அந்த நிலையம், உடல் உறுப்பு மாற்று சிகிச்சைகளை மேம்படுத்தவும் உறுப்புகளைத் தானமாகப் பெறும் முயற்சிகளை வலுப்படுத்தவும் பேருதவியாக இருக்கும்.

மருத்துவர்கள் மட்டுமல்லாமல் ஆய்வு, கல்விமான்களையும் சிங்ஹெல்த்தின் டியூக்-என்யூஎஸ் உறுப்பு மாற்று சிகிச்சை நிலையம் ஒருங்கிணைக்கும்.

மேலும் மருத்துவமனையில் உள்ள அனைத்து உடல் உறுப்பு சிகிச்சைகளையும் திசு, உயிரணு மாற்று சேவைகளையும் ஒன்றிணைத்து நிலையம் செயல்படும்.

சிறுநீரகம், கல்லீரல், இதய மாற்று அறுவை சிகிச்சை, கரு விழிப்படலம், கருப்பை திசு போன்ற சிகிச்சைகளும் இவற்றில் அடங்கும்.

புதிய நிலையத்தை நேற்று தொடங்கி வைத்துப் பேசிய சுகாதார அமைச்சர் கான் கிம் யோங், “சிங்ஹெல்த்தின் நிபுணர்களை ஆய்வு, கல்வி ஆற்றல்களுடன் இணைப்பது புதிய நிலையத்தின் நோக்கம்,” என்று குறிப்பிட்டார்.

“உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்குப் பிறகு உயிர் பிழைக்கும் சாத்தியத்தை அதிகரிக்கும் வழிகளை புதிய நிலையம் கண்டறியும். அதோடு நோயாளிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதையும் அறுவை சிகிச்சை செலவுகளை நோயாளிகளுக்குக் கட்டுப்படியாகக் கூடிய வகையில் வைத்திருப்பதையும் நிலையம் ஆராயும்,”

> உடல் உறுப்பு சிகிச்சைகளை புதிய நிலையம் மேம்படுத்தும்.
>
> **சுகாதார அமைச்சர் கான் கிம் யோங்**



என்றார் அவர்.

நிகழ்ச்சியில் தொடர்ந்து பேசிய அமைச்சர் கான், “உறுப்பு மாற்று சிகிச்சைக்குப் பிந்திய பராமரிப்பை மேம்படுத்தவும் உறுப்புத் தானத்திற்காகக் காத்திருக்கும் நேரத்தைக் குறைக்கவும் உணவு நிபுணர்கள், இயன் மருத்துவர்கள், தாதிகள், மருத்துவர்கள் உட்பட பல்வேறு பிரிவுகளில் பணியாற்றுபவர்களை நிலையம் இணைக்கும்,” என்றும் தெரிவித்தார்.

கல்லீரல், கணைய நோய், உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை பிரிவின் இணைப் பேராசிரியர் பிரேமா ராஜ் ஜெயராஜ் தலைமையில் புதிய நிலையம் செயல்படும்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.